தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 26, பிரமோதூத, திருவள்ளுவர் ஆண்டு–2021—
1990 மே 9, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் 9–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

'உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்.''

கள்ளை உண்ணக்கூடாது. சான்றோரால் நன்கு எண்ணப் படுவதை விரும்பாதவர் கள்ளை உண்ணவேண்டுமானால், உண்ணலாம்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

காவல் நிலையத்தை இரண்டாகப் பிரித்தல்

* 3335—திரு. கா. அண்ணாதுரை :

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையில் உள்ள காவல் நிலையத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பிரிக்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி துணைத் தலைவர் அவர்களே,

(அ) தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டையில் உள்ள காவல் நிலையத்தை இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை காவல் நிலையம், பட்டுக்கோட்டை வட்டம் மற்றும் பேராவூரணி வட்டத்தினுடைய சில பகுதிகளை உள்ளடக்கிய மிகப் பெரிய காவல் நிலையமாக இருக்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நீதி வழங்கமுடியாத நிலையிலே இன்றைக்கு அங்கே இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், பட்டுக்கோட்டை காவல் நிலையத்தை, வட்டக் காவல் நிலையம் மற்றும் நகர காவல் நிலையம் என்று இரண்டாகப் பிரிப்பதற்குக் கருணையுடன் நமது முதல்வர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இன்னொரு காவல் நிலையம் வைக்கப்படுமா என்ற கேள்வி கேட்டால் புரிந்துகொள்ள முடியும். இருக்கிற காவல் நிலையத்தை இரண்டாகப் பிரிக்க முடியுமா என்று கேட்பது எனக்குப் புரியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்வியினுடைய அடிப்படையில், இயலுமானால் அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகரம் ஒரு வளர்ந்து வரக்கூடிய நகரம் என்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் நன்கு அறிவார்கள். எனவே, அந்தப் பட்டுக்கோட்டை நகரத்திலே ஒரு பெண் காவலர் பிரிவை வழங்குவதற்காவது நம்முடைய முதல்வர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இன்னும் வளரட்டும். பார்க்கலாம் (சிரிப்பு.)

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாலுக்கா மட்டத்திலே நம்முடைய காவல் நிலையங்கள் இப்போது சட்டம்-ஒழுங்கு, கிரைம் (லா அண்டு ஆர்டர் மற்றும் கிரைம்) இவை இரண்டையும் சேர்த்தே கவனிக்கக்கூடிய நிலைமையிலே அமைந்திருக்கின்றன. இந்தப் பிரச்சினைகள் எல்லாம், கிராமப்புறங்களிலே வேறுவிதமான பிரச்சினைகளாகவும், நகர்ப் புறங்களிலே வேறுவிதமான பிரச்சினைகளாகவும் இருக்கின்றன. தமிழ்நாடு தழுவிய அளவிலே காவல் துறையினுடைய நிலையங்களை, 'ரூரல், அர்பன்' என்று பிரித்துச் செயல்படுத்துகிற செயற்குறிப்பு," திட்டம் அரசின் பரிசீலனையில் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை. இது குறித்தெல்லாம் போலீஸ் கமிஷனுடைய பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அவர்களோடு கலந்தாலோசித்து அதுகுறித்து முடிவு எடுக்கலாம்.

1990 மே 9]

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அண்ணாதுரை அவர்கள் கேட்ட கேள்வி மிகவும் அருமையான கேள்வி. பட்டுக்கோட்டை என்பது, மிகப் பெரிய அளவிலே இருக்கின்ற ஒரு பகுதியாகும். ஆகவே, அந்தப் பட்டுக்கோட்டையைப் பிரிப்பது என்பதை விட, பட்டுக்கோட்டையினுடைய சுமைகளைக் குறைப்பதற்கு, பட்டுக்கோட்டை வட்டத்திலேயே 'குறிச்சி' என்ற ஒரு இடத்திலே போலீஸ் ஸ்டேஷனை வைத்தால் மிகவும் சௌகரியமாக இருக்கும். அதைப் பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, குறிச்சி எந்தத் தொகுதியில் இருக்கிறது என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு)

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. அதற்கு ஒரு அரசுக் கட்டிடம் இருந்தால் நன்றாக இருக்கும். துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம், அரசுக் கட்டடத்திலே இயங்குவதற்கு முதல்வர் ஐயா அவர்கள் கருணைகூர்ந்து நடவடிக்கை எடுப்பாரா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, முதல்வர் தான் பதிலளிக்க முடியும். முதல்வர் ஐயா பதில் அளிக்கமுடியாது. (சிரிப்பு).

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாம் பல இடங்களிலே புதிதாகப் போலீஸ் ஸ்டேஷன்களை ஆரம்பித்து இருக்கின்றோம். கிராமங்களிலே எல்லாம் போலீஸ் ஸ்டேஷன்களை ஆரம்பித்து—முதல்வர் அவர்கள் சிரிப்பின் காரணத்தாலே, மகிழ்ச்சியோடு இருக்கிற காரணத்தாலே—(குறுக்கீடு), பல இடங்களிலே நாம் ஏற்கனவே 4, 5 ஆண்டுக் காலமாக புதிதாக போலீஸ் ஸ்டேஷன்களை கிராமப்புறங்களிலே ஆரம்பித்து இருக்கிறோம். அப்படி கிராமப்புறங்களிலே ஆரம்பிக்கப்பட்ட போலீஸ் ஸ்டேஷன்களுக்கு இன்னும் கட்டிடம் கட்டாத காரணத்தால், சப் இன்ஸ்பெக்டர்கள் எல்லாம் தங்கமுடியாமல், போலீஸ்காரர்கள் எல்லாம் தங்கமுடியாமல், போலீஸ் ஸ்டேஷன் நடத்துவதற்கே இடம் இல்லாமல் உள்ள சூழ்நிலை இருக்கிறது. நடப்பு ஆண்டிலே எத்தனை இடங்களிலே இந்த மாதிரி கட்டிடம் கட்டுவதற்கான வசதிகள் செய்யப்படும் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் கேட்ட கேள்வியின் தொடர்ச்சிதான் இந்தக் கேள்வியும். அரசினுடைய குறிக்கோளே எல்லாக் காவல் நிலையங்களுக்கும் காவல்துறை அதிகாரிகள் இருக்கின்ற இடங்களுக்கும், அரசின் சார்பிலேயே கட்டிடங்கள் அமைத்துத் தர வேண்டும் என்பது தான். இருந்தாலும், நிதியாதாரங்களைக் கொண்டு, படிப்படியாக, இந்தப் பணிகளை நாம் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே, எல்லாக் காவல் நிலையங்களுக்கும், அதற்குரிய கட்டிடங்கள் அமைத்துத் தர வேண்டுமென்ற குறிக்கோளை நோக்கி, இந்த அரசு நடைபோடும்.

9–05 மணி

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களை கூட்டா விட்டாலும், மக்கள் தொகைக்கேற்ப, காவலர்களையாவது கூட்டும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கருத்து ஏற்கப்பட வேண்டிய ஒன்று; இருந்தாலும், நிதியாதாரத்தை முக்கியமாகக் கொண்டு, இதைப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. மக்கள் தொகை பெருகி வருகிற நேரத்தில், காவலர்களினுடைய எண்ணிக்கையையும் பெருக்க வேண்டும் என்பதை மறுப்பதற்கில்லை.

மெக்னீஷிய உலோகத் திட்டம்.

* 6490 திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில், மெக்னீசிய உலோகத் திட்டம் செயல்படுத்தப்படுவது குறித்த பணிகள் எந்த நிலையில் உள்ளன ?

(ஆ) இத்திட்டம் எப்போது நிறைவு பெறும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) பொதுத் துறை நிறுவனமான தமிழ்நாடு மெக்னீசியம் அண்டு மெரைன் கெமிக்கல்ஸ் நிறுவனத்தில், மெக்னீசிய உலோகத் திட்டப் பணி செப்டம்பர் திங்கள் 1989-ல் முடிவுவுற்றது. உற்பத்திக்கான முன்னோட்டம் தொடங்கப்பட்டுவிட்டது.